



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

“தேமதுரத் தமிழோசை உலகமெலாம்”






Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 327 | 20.05.2026 | WEDESDAY | VAIKASI : 5 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 327 | 20.05.2026 | புதன்கிழமை | வைகாசி : 5 | விலை : ரூ.5/–


## கோயில்களின் தங்கத்தை பணமாக்க திட்டமா?

# “மத்திய அரசு மறுப்பு!”

புதுடெல்லி: மே.20-

நாடு முழுவதும் உள்ள கோயில்களில் உள்ள தங்கத்தின் இருப்புகளுக்கு மாற்றாக தங்கப் பத்திரங்களை வெளியிட அல்லது அவற்றை பணமாக்க மத்திய அரசு திட்டமிடுவதாக பரவி வரும் செய்திகள் தவறானவை என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் அளித்துள்ள விளக்கத்தில், ‘நாடு முழுவதும் உள்ள கோயில் அறக்கட்டளைகள் அல்லது மத அமைப்புகளின் பொறுப்பில் உள்ள தங்கத்தை பணமாக்குவதற்கான திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு திட்டமிடுகிறது என்பது எந்த அடிப்படையும் இல்லாத முற்றிலும் தவறான வதந்தியாகும்.

கோயில் கோபுரங்கள், கதவுகள் அல்லது இதர கோயில் அமைப்புகளின் மீதுள்ள தங்கத்தகடுகளை இந்தியாவின் தங்க இருப்புகளாக கருதுவதாக பரவும் செய்திகளும் முற்றிலும் அடிப்படையற்ற தவறான தகவல்.

மக்கள் இதுபோன்ற வதந்திகளை நம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தெளிவுப்படுத்தப்படாத தகவல்களைப் பரப்புவது தேவையற்ற குழப்பத்தை உருவாக்கி மக்களை தவறாக வழிநடத்துகிறது.

எனவே அனைத்து குடிமக்களும் அங்கீகரிக்கப்பட்ட தளங்கள் மூலம் வெளியிடப்படும் அதிகாரப்பூர்வ தகவல்களை தெரிந்து கொள்ளுமாறு அரசு வலியுறுத்துகிறது. கொள்கை முடிவுகள் அல்லது அரசுத்திட்டங்கள் தொடர்பான எந்தவொரு தகவலும் அதிகாரப்பூர்வ பத்திரிகை செய்திகள், அரசு இணையதளங்கள் மற்றும் பொது தகவல் தளங்கள் மூலம் பகிர்ந்து கொள்ளப்படும்’ என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு அரசின் “நட்புடன் உங்களோடு” திட்டம்: மனநல ஆலோசனைகள் பெறலாம்

சென்னை, மே.20-

தமிழகத்தில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 11ந் தேதி தொடங்கி கடந்த 6ந் தேதி வரை நடந்தது. இந்த தேர்வை 8 லட்சத்து 82 ஆயிரத்து 806 பள்ளி மாணவர்களும், 13 ஆயிரத்து 744 தனித்தேர்வர்களும் என மொத்தம் சுமார் 9 லட்சம் பேர் எழுதினர்.



இதைத்தொடர்ந்து விடைத்தாள்கள் திருத்தும் பணி தமிழகம் முழுவதும் பல்வேறு மையங்களில் நடைபெற்றது. இப்பணிகள் சமீபத்தில் முடிவடைந்தன. இதைத்தொடர்ந்து மாணவ மாணவிகள் பெற்ற மதிப்பெண்கள் கணினியில் பதிவேற்றும் பணி தீவிரமாக நடைபெற்றது. 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் 20ந் தேதி (இன்று) வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கான பணிகளை பள்ளிக்கல்வி, தேர்வுத்துறை அதிகாரிகள் முழுவீச்சில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில், திட்டமிட்டபடி, நாளை (20ம் தேதி) 10ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அறிவித்துள்ளார்.

10ம் வகுப்பு (2025 -26) பொதுத்தேர்வு முடிவுகள் 20.05.2026 ம் (இன்று) தேதியன்று வெளியிடப்படுகிறது. இந்த நிலையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, சார்பில் தமிழ்நாடு அரசின் நட்புடன் உங்களோடு திட்டத்தில் மனநல ஆலோசனை பெற கட்டணமில்லா தொலைபேசி எண் 14416 அல்லது 104 அழைக்கவும்.

மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம் காக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் “நட்புடன் உங்களோடு” திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, ‘டெலி கவுன்சிலிங்’ (Tele Counselling) தேவைப்படும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் தயங்காமல் 14416 அல்லது 104 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு மனநல ஆலோசனைகளை தவறாமல் பெற்றுக் கொள்ளலாம். பயிற்சி பெற்ற மனநல ஆலோசகர்கள், மருத்துவர்கள் மூலம் கட்டணமின்றி இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது.

## “மோடி மக்களை இன்னும் அதிகமாக சுரண்டுவார்”

### பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு காங்கிரஸ் கண்டனம்

புது டெல்லி: மே.20-

தேர்தல்கள் முடிந்ததால் விலைவாசி நாயகரான மோடி மக்களை இன்னும் அதிகமாகச் சுரண்டுவார் என பெட்ரோல், டீசல் விலை உயர்வு தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடியை காங்கிரஸ் கட்சி கடுமையாக விமர்சித்துள்ளது.



ஒரே வாரத்தில் இன்று இரண்டாவது முறையாக பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ள நிலையில், பிரதமர் மோடியை கடுமையாக விமர்சித்துள்ள காங்கிரஸ் கட்சி, ‘விலைவாசி நாயகரான மோடியின் சாட்டை அடி மீண்டும் மக்கள் மீது விழுந்துள்ளது. பெட்ரோல் மற்றும் டீசல் விலை லிட்டருக்கு தலா 90 பைசா உயர்த்தப்பட்டுள்ளன. கடந்த 4 நாட்களில் மட்டும் மோடி பெட்ரோல், டீசல் விலையை 4 ரூபாய் வரை உயர்த்தியுள்ளார்.

இந்த விலை உயர்வுடன் சேர்த்து, நாடு முழுவதும் பெட்ரோல் விலை 109 ரூபாயாகவும், டீசல் விலை 96 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இது வெறும் ஆரம்பம் மட்டுமே. தேர்தல்கள் முடிந்துவிட்டதால், இந்த 'விலைவாசி நாயகர்' இன்னும் அதிகமாகச் சுரண்டுவார்’ என்று காங்கிரஸ் கட்சி தனது சமூக வலைதள பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

பெட்ரோல், டீசல் விலையை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் இன்று மீண்டும் உயர்த்தி உள்ளன. இன்று பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு 90 பைசா அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 5 நாட்களில் இரண்டாவது முறையாக பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது. முன்னதாக கடந்த மே 15 ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ. 3 அளவுக்கு உயர்த்தப்பட்டது.

இன்று விலை உயர்த்தப்பட்ட நிலையில், சென்னையில் பெட்ரோல் விலை 82 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.104.49 என விற்பனை ஆகிறது. டீசல் விலை 86 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.96.11 என விற்பனை ஆகிறது.

தலைநகர் டெல்லியில் ஒரு லிட்டர் பெட்ரோல் ரூ.97.77ல் இருந்து ரூ.98.64 என உயர்ந்துள்ளது. அங்கு டீசல் விலை ரூ.90.67ல் இருந்து ரூ.91.58 என விலை உயர்ந்துள்ளது. கொல்கத்தாவில் பெட்ரோல் விலை 96 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் ரூ.109.70 என விற்பனை ஆகிறது. டீசல் விலை 94 பைசா உயர்ந்து, ஒரு லிட்டர் 96.07 என விற்பனை ஆகிறது.

## “தவெக சார்பில் கூட்டணி பேச வந்தவர்களை உதாசீனப்படுத்தினார் பழனிசாமி” சி.வி.சண்முகம் குற்றச்சாட்டு

சென்னை, மே.20-

அதிமுகவோடு கூட்டணி அமைப்பது தொடர்பாக பேசுவதற்காக தவெக சார்பில் வந்தவர்களை உதாசீனப்படுத்தினார் என்றும், அதிமுக தவெக கூட்டணி அமையக்கூடாது என்பதில் குறியாக இருந்தார் என்றும் எடப்பாடி பழனிசாமி மீது, முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் குற்றம் சாட்டியுள்ளார்.



சென்னையில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம், சி.விஜயபாஸ்கர் உள்ளிட்ட அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்கள் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய சி.வி.சண்முகம், “நடந்து முடிந்த தேர்தலில் பழனிசாமி தலைமையில் அதிமுக படுதோல்வியை சந்தித்துள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் தொடர் தோல்வியை அதிமுக சந்தித்து வருகிறது. அதிமுகவின் வாக்கு வங்கியும் தொடர்ந்து சரிவை நோக்கிச் செல்கிறது. இந்த தோல்விக்கான காரணங்களை ஆராய வேண்டும், அதிமுகவை மீண்டும் வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும், இளைஞர்களை இயக்கத்தில் இணைக்க வேண்டும் என நாங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தோம்.

2024 மக்களவைத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் நாங்கள் 6 பேர் இதுபற்றி பழனிசாமியை சந்தித்துப் பேசினோம். பிரிந்து சென்றவர்கள், நீக்கப்பட்டவர்களை ஒருங்கிணைத்து ஒன்றுபட்ட அதிமுகவை உருவாக்க வேண்டும் என அவரிடம் சொன்னோம். ஆனால், அவர் அதை ஏற்க மறுத்தார். அப்போதும் தோல்விக்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்படவில்லை.

அதிமுகவை ஒருங்கிணைக்க மறுத்த காரணத்தால், வலிமையான கூட்டணியை அமைக்காத காரணத்தால் தோல்வியடைந்துள்ளோம். அப்போதே நாங்கள் தவெகவுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்று சொன்னோம். தவெக சார்பாகவும் கூட்டணி அமைக்க நம்மோடு பேசினார்கள். கூட்டணி பேச வந்தவர்களை உதாசீனப்படுத்தினார். கூட்டணி அமையக்கூடாது என்ற நோக்கத்தில், அவர்களிடம் பேசி வெளியேற்றுவதில் குறியாக இருந்தார். அதேபோல தேமுதிகவையும் அரை பர்சண்ட் கட்சி என சொல்லி கூட்டணியிலிருந்து வெளியேற்றினார். டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட யாரையும் அரவணைக்காமல், தான் மட்டும் இருந்தால் போதும் என தேர்தலை சந்தித்தார்.

அதிமுகவை விட்டு சென்ற ஓபிஎஸ், எனக்கு எந்தப் பொறுப்பும் வேண்டாம், அடிப்படை உறுப்பினராக இருக்கிறேன் என்று சொன்னார். அவரையும் சேர்த்துக்கொள்ள மறுத்தார். இப்போது பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், ‘ தவறு செய்தவர்கள் திருந்திவந்தால் ஏற்றுக் கொள்வோம்’ என சொல்கிறார். கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது போல, தனது பதவிக்கு ஆபத்து வந்தவுடன் இதுபோல பேசுகிறார். முன்னமே இதனை செய்திருந்தால், பழனிசாமி இன்று முதல்வராகியிருப்பார். இதனை கெடுத்து, அதிமுக படுதோல்வியடைய யார் காரணம்? இதையெல்லாம் செய்துவிட்டு அவர் தன்னை நல்லவர் போல காட்டிக் கொள்கிறார்.

நாங்கள் அதிமுகவுக்கு துரோகம் செய்துவிட்டதுபோல இன்று அறிக்கை வெளியிடுகிறார். தனிப்பட்ட முறையில் யாரையும் நாங்கள் விமர்சனம் செய்யமாட்டோம். ஆனால், எங்களையும், எங்கள் குடும்பத்தையும் பற்றி கண்ணியமற்று விமர்சிக்கிறார்கள். பலமான அதிமுகவை மீட்டெடுக்க வேண்டும் என்பதே எங்களின் ஒரே நோக்கம். இன்று பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்கிறார். அதற்காகவே நாங்கள் பொதுக்குழுவை கூட்டி விவாதிப்போம் எனக் கோரிக்கை விடுக்கிறோம். பொதுக்குழுவை கூட்டி இரு தரப்பும் கருத்தை தெரிவிப்போம், பெரும்பான்மை உறுப்பினர்கள் எதனை ஏற்றுக் கொள்கிறார்களோ அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஒருபக்கம் பேசித் தீர்க்கலாம் என சொல்லிவிட்டு, மறுபுறம் 31 மாவட்டச் செயலாளர்களை பழனிசாமி நீக்குகிறார். பொதுக்குழுவை கூட்ட கையெழுத்துப் போட்டால் உங்கள் பதவி பறிக்கப்படும் என அச்சுறுத்தல் விடுக்கிறார். இதுபோல மிரட்டப்பட்டால் எப்படி கட்சி வளரும்? கட்சி பொறுப்புகளில் இருந்து பழனிசாமியால் நீக்கப்பட்டது சட்டப்படி செல்லாது. பன்னீர்செல்வம் பழனிசாமி தொடர்பான வழக்கில், ஜெயலலிதா இருந்தபோது பொறுப்புகளில் இருந்தவர்களுக்கே கையெழுத்து போடும் அதிகாரம் என தீர்ப்பு வந்தது.

அதேபோல, அதிமுகவில் எங்களுக்கும், பழனிசாமி தரப்புக்கும் மோதல் ஏற்பட்ட மே 11ஆம் தேதிக்கு முன்பு யாரெல்லாம் பொறுப்பில் இருந்தார்களோ, அவர்களே பதவியில் நீடிப்பார்கள். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதிமுக சட்டவிதிகளின் படி 5ல் 1 பங்கு பொதுக்குழு உறுப்பினர்களின் கையெழுத்தை பெற்று பொதுச்செயலாளரிடம் கொடுத்தால், பொதுக்குழுவை 30 நாட்களுக்குள் கூட்டவேண்டும் என உள்ளது. ஆனால் சர்வாதிகாரமாக பழனிசாமி அதனை ஏற்க மறுக்கிறார். மறுபுறம் பொதுக்குழுவை கூட்ட வேண்டாம் என சுற்றறிக்கை விடுகிறார். பொதுக்குழுவை கூட்டி தேர்தல் தோல்வி குறித்து விவாதிக்க வேண்டும். அனைவரையும் ஒருங்கிணைத்து அதிமுகவை வலிமையான இயக்கமாக்க வேண்டும். நாங்கள் பேசத் தயார், ஆனால் பொதுக்குழுவை கூட்டி விவாதம் செய்ய வேண்டும்” என்றார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்

தொடர்புக்கு : 88705 00000

# பொது இடங்களில் இருந்து தெரு நாய்களை அப்புறப்படுத்தும் உத்தரவை திரும்பப் பெற உச்ச நீதிமன்றம் மறுப்பு



புதுடெல்லி:,மே,20-

பொது இடங்களில் இருந்து பிடிக்கப்படும் தெருநாய்களுக்கு தடுப்பூசி அல்லது கருத்தடை செய்த பிறகு அவற்றை மீண்டும் பொது இடங்களில் விடக்கூடாது என்ற தனது முந்தைய உத்தரவை திரும்பப் பெற உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. இது தொடர்பாக கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை திரும்பப் பெறக் கோரி தொடரப்பட்ட மனுக்களை விசாரித்த நீதிபதி விக்ரம் நாத் தலைமையிலான அமர்வு அனைத்து மனுக்களையும் இன்று (மே 19) தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றம் தனது உத்தரவில், “தெருநாய்கள் தொடர்பாக 2025, நவம்பரில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு திரும்பப் பெறப்பட மாட்டாது. பொது இடங்களில் இருந்து பிடிக்கப்படும் தெருநாய்களுக்கு தடுப்பூசி அல்லது கருத்தடை செய்த பிறகு அவற்றை மீண்டும் பொது இடங்களில் விடக்கூடாது. மாறாக அத்தகைய நாய்களை பாதுகாப்பு இல்லங்களில் அடைத்து வைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.குழந்தைகள், முதியவர்கள், பயணிகள் மீது நாய்கள் நடத்திய தாக்குதல்கள் மிகவும் கவலைக்குரியவை. இந்த அச்சுறுத்தல் விமான நிலையங்களையும், குடியிருப்புப் பகுதிகளையும் எட்டிவிட்டது. உச்ச நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளைச் செயல்படுத்தத் தவறும் அதிகாரிகள் நீதிமன்ற அவமதிப்பு மற்றும் ஒழுங்கு நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும்.

மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் விலங்கு பிறப்பு கட்டுப்பாட்டு மையங்களை அமைக்க வேண்டும், வெறிநாய்க்கடி தடுப்பூசிகள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும், வெறிநாய்க்கடி நோய் தாக்கிய ஆபத்தான நாய்களை கருணைக்கொலை செய்வது உள்ளிட்ட சட்டப்படி அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உச்ச நீதிமன்ற உத்தரவுகள் பின்பற்றப்படுவதை உயர் நீதிமன்றங்கள் கண்காணிக்க வேண்டும். தேவை எனில், தாமாக முன்வந்து வழக்குகளைப் பதிய வேண்டும்” என தெரிவித்துள்ளது.

# மாதம் ₹750 உதவித்தொகை, இலவச லேப்டாப் மற்றும் ஹாஸ்டல் வசதி! அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சலுகைகள்

தென்காசி,மே,20-

தென்காசி, கடையநல்லூர், வீரகேரளம்புதூர் மற்றும் குருக்கள்பட்டி அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் 2026ஆம் கல்வி ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் இணையதளம் வாயிலாக (https://skilltraining.tn.gov.in/detitiadm/) 18.05.2026 முதல் வரவேற்கப்படுகின்றன. இந்நிலையங்களில் ஈராண்டு தொழிற்பிரிவுகளான Fitter (பொருத்துநர்), Electrician (மின்சாரப்பணியாளர்), Mechanic Motor Vehicle (கம்மியர்மோட்டார்வாகனம்), Wireman (கம்பியாள்), Wind Plant Technician (காற்றாலைதொழில்நுட்பவியலாளர்) (SCVT) மற்றும் ஓராண்டு தொழிற்பிரிவுகளானWelder (பற்றவைப்பாளர்) Mechanic Diesel (கம்மியர் டீசல்), Pump Operator cum mechanic (பம்ப்மெக்கானிக்), IOT Technician Smart Agriculture (நவீனமேலாண்மை) (SCVT) மற்றும் 6 மாதம் தொழிற்பிரிவான Drone Pilot (Junior) (டிரோன்பைலட் (இளநிலை)) ஆகிய தொழிற்பிரிவுகள் உள்ளன.



மேலும் தொழிற்நுட்பமையம் 4.0 திட்டத்தின் கீழ், ஈராண்டு தொழிற்பிரிவுகளான Advanced CNC Machining Technician-NCVT (மேம்படுத்தப்பட்ட CNC இயந்திர தொழிழ்நுட்ப வல்லுநர்) Mechanic Electric Vehicle-NCVT (கம்மியர் மின்சார வாகனம்), மற்றும் ஓராண்டு தொழிற்பிரிவுகளான Industrial Robotics and Digital Manufacturing Technician – NCVT (தொழிற்துறை ரோபோட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர்), Manufacturing Process Control and Automation (உற்பத்தி செயல்முறை கட்டுப்பாட்டு மற்றும் தானியங்கி) ஆகிய தொழிற்பிரிவுகள் உள்ளன. விண்ணப்பங்கள் விண்ணப்பிக்க 8ஆம்வகுப்பு மற்றும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 14 வயது முதல் விண்ணப்பிக்கலாம். மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், ஆதார் அட்டை, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ உள்ளிட்ட ஆவணங்களுடன் ஆன்லைனில் விண்ணப்பிக்க அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் தென்காசி, கடையநல்லூர், வீரகேரளம்புதூர் மற்றும் மாவட்ட திறன்பயிற்சி அலுவலகத்திற்கு நேரில் அணுகவும். பயிற்சியில் சேருவோருக்கு அரசு கல்வி உதவித்தொகை மாதம்ரூ.750/ விலையில்லாமடிக்கணினி(Laptop) மிதிவண்டி, சீருடைகள், தையல்கூலி, மூடுகாலணிகள், பாடப்புத்தககங்கள், வரைபடகருவிகள், பஸ்பாஸ், சலுகைகட்டண ரெயில்பாஸ், ஆகியன வழங்கப்படும். மேலும், உணவு வசதியுடன் கூடிய விடுதிவசதி உண்டு. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலமும், மாணவர்களுக்கு தமிழ்புதல்வன் திட்டத்தின் மூலமும் உதவித்தொகை பெற்று வழங்கப்படுகிறது.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் தென்காசி– 9499055797, 9499055796, கடையநல்லூர்04633290270, 9499055801, 9499055800, வீரகேரளம்புதூர் 04633 210962, 9944055798, 9487986493, குருக்கள் பட்டி 9488728415 மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம்04633298088.

மேலும் இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், தென்காசி, கடையநல்லூர், வீரகேரளம்புதூர் மற்றும் மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், தென்காசி என்ற முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

# வீட்டை அபகரிக்க மருமகள் முயற்சி; மாமனார் தர்ணா போராட்டம்: காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் பரபரப்பு



காஞ்சிபுரம்:மே,20-

மகன் வாங்கிய கடன் பிரச்னையில் தனது வீட்டை அபகரிக்க மருமகள் முயற்சிப்பதாக கூறி மாமனார் காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது. காஞ்சிபுரம் அண்ணாநகர் பகுதி சேர்ந்தவர் கந்தசாமி (75). நெசவாளியான இவர், தனது மனைவி பானுமதி (70) என்பவருடன் நேற்று காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகம் வந்தார். அப்போது அங்கிருந்த போலீசாரிடம் கலெக்டரை சந்தித்து மனு அளிக்கவேண்டும் என கூறியுள்ளார். மனுவில், ‘எங்கள் மகன் பரந்தாமன் (38)க்கு பானுப்பிரியா (36) என்ற பெண்ணை 2019ம் ஆண்டு திருமணம் செய்து வைத்தோம். அவர்கள் சென்னை அருகேயுள்ள நன்மங்கலம் பகுதியில் வசிக்கின்றனர்.

இந்த நிலையில் பானுப்பிரியா, எங்களது மகன் கடன் வாங்கிய வகையில் 17 லட்சம் மற்றும் வட்டியாக 2 லட்சம் ரூபாய் என 19 லட்சம் ரூபாயை கேட்டு மகனை துன்புறுத்தி வருகிறார். இதனால் பரந்தாமன் தற்கொலைக்கு முயற்சி செய்தான். அவனை மருத்துவமனைக்கு அழைத்து காப்பாற்றினோம். இப்போது மனநிலை பாதிக்கப்பட்டவன்போல் மாறிவிட்டான். கடன் பணத்திற்கு ஈடாக எங்களுடைய வீட்டை எழுதி வாங்க மருமகள் பானுப்பிரியாவின் தூண்டுதலின்பேரில் சதீஷ்குமார் மற்றும் முத்து, செந்தில்குமார், சரண்யா உள்ளிட்ட சிலர் வீட்டின் மீது வழக்கு போட்டு அபகரிக்க முயற்சி செய்து வருகின்றனர்.

இதுதொடர்பாக விஷ்ணு காஞ்சிகாவல்நிலையத்தில் புகார் அளித்தோம். அன்றிலிருந்து போராடி வருகிறோம். அதிகாரிகளிடம் பலமுறை புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. முதுமை மற்றும் வறுமை காரணமாக போராட முடியாத நிலையில் இருந்து வருகிறோம். எனவே, மகனையும் சொத்தையும் மீட்டுத்தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்’என கூறினர்.இதற்கு போலீஸ் அதிகாரிகள் உரிய பதில் அளிக்காததால், காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலக வாசல் முன் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார், முதியவர் கந்தசாமியை சமாதானம் செய்து, உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறி அனுப்பி வைத்தனர். முதியவரின் தர்ணா போராட்டத்தால் காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகத்தில் பரபரப்பு ஏற்பட்டது

# சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 19 பேரை நீதிபதிகளாக நியமிக்க கொலிஜியம் ஒப்புதல்

சென்னை:,மே 20-

சென்னை உயர் நீதிமன்றத்துக்கு 19 பேரை நீதிபதிகளாக நியமிக்க உச்ச நீதிமன்ற கொலிஜியம் ஒப்புதல் அளித்துள்ளது.சென்னை உயர் நீதிமன்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட 75 நீதிபதிகள் பணியிடங்களில் 23 நீதிபதி பணியிடங்கள் காலியாக உள்ளன.இந்த காலிப் பணியிடங்களை நிரப்பும் வகையில், கடந்த 2025ஆம் ஆண்டு மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் அந்தஸ்தில் உள்ள சென்னை உயர் நீதிமன்ற தலைமை பதிவாளர் எஸ்.அல்லி மற்றும் மாவட்ட நீதிபதிகள் முருகன், சுமதி, திருமகள் சந்திரசேகர், தர்மலிங்கம் லிங்கேஸ்வரன், கார்த்திகேயன் பாலதாண்டாயுதம், சண்முகம் கார்த்திகேயன், பாலுச்சாமி முருகேசன், குணசேகரன் ஆகிய 9 பேரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இதேபோல, வழக்கறிஞர்கள் என்.ரமேஷ், ஜி.கே. முத்துக்குமார், ராஜேஷ் விவேகானந்தன், சங்கரநாராயணன் ரவிக்குமார், நாகராஜன் திலீப்குமார், இ.மனோகரன், கிருஷ்ணசாமி கோவிந்தராஜன், ரஜினிஷ் பதியில், கே.அப்பாதுரை, ஆர்.அனிதா ஆகிய 10 பேரின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டு இருந்தன.உச்ச நீதிமன்ற கொலிஜியத்தின் கூட்டத்தில், சென்னை உயர் நீதிமன்றத்துக்கு நீதிபதிகளாக பரிந்துரைக்கப்பட்ட 19 பேரின் பரிந்துரைகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்தகட்டமாக, இவர்களின் நியமனத்துக்கு மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில், குடியரசு தலைவர் புதிய நீதிபதிகள் நியமனம் குறித்த உத்தரவை பிறப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பொதுமக்கள் குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும்! திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் வேண்டுகோள்

திருப்பூர்,,மே 20-

திருப்பூர் மாநகராட்சிக்கு 2வது, 3வது மற்றும் 4வது குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. இவற்றில் தலைமை நீரேற்று நிலையம் மேட்டுப்பாளையம் நான்காவது குடிநீர் திட்டம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் இரண்டாவது குடிநீர் திட்டங்களில் சீரமைப்பு பணிகள் மற்றும் மின் தடை காரணத்தினாலும், மாநகரில் பெறப்படும் குடிநீரின் அளவு குறைந்துள்ளதால் குடிநீர் பகிர்மானத்தில் சீரான கால இடைவெளியில் குடிநீர் விநியோகிக்க இயலாத நிலை உள்ளது. ஆதலால் குடிநீர் விநியோகம் ஓரிரு நாட்கள் காலதாமதமாக விநியோகமாகும் என பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு செய்யப்படுகிறது. ஆதலால் பொதுமக்கள் குடிநீரை சேமித்து வைத்து சிக்கனமாகவும் நன்கு காய்ச்சி குடிநீரை பருக வேண்டும் என மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

# இம்ரான் கான் ஆட்சியை கவிழ்க்க அமெரிக்கா சதி? வெளியான ஆவணத்தால் வெடித்தது சர்ச்சை

வாஷிங்டன்: மே,20-

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், தாம் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்குப் பின்னால் வெளிநாட்டுச் சதி இருப்பதாகத் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை கூறி வந்தார். இதற்கு வலுச் சேர்க்கும் விதமாக, ரகசிய அரசு தூதரக ஆவணம் ஒன்று தற்போது கசிந்துள்ளது பாகிஸ்தானில் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

‘சைபர்' என்று அழைக்கப்படும் இந்த ஆவணம், மார்ச் 2022ல் அமெரிக்காவுக்கான அப்போதைய பாகிஸ்தான் தூதர் ஆசாத் மஜீத் கான் மற்றும் அமெரிக்க தூதர் டொனால்டு லூ ஆகியோருக்கு இடையே நடைபெற்ற உரையாடலை விவரிக்கிறது. இந்த உரையாடல்தான் இம்ரான் கானின் ஆட்சி கவிழ்ப்புக்கும், அவரது தற்போதைய சிறைவாசத்திற்கும் வழிவகுத்ததாகக் கூறப்படுகிறது.

அமெரிக்காவைச் சேர்ந்த புலனாய்வு ஊடகமான டிராப் சைட் , ‘கேபிள் ஐ0678' (cable மி0678) என அடையாளம் கொ்ண்ட இந்த அசல் ஆவணத்தை வெளியிட்டுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பில் பாகிஸ்தான் நடுநிலை வகித்ததால் ஜோ பைடன் அதிருப்தியடைந்தார். இதையடுத்து தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை மூலம், மார்ச் 7, 2022ல் நடைபெற்ற சந்திப்பின்பே்து, இம்ரான் கானைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்குமாறு வற்புறுத்தியுள்ளதை அந்த ஆவணம் சுட்டிக்காட்டுகிறது.

மேலும், ஆப்கானிஸ்தானுக்கு எதிராகத் தனது ராணுவத் தளங்களை அமெரிக்கப் படைகள் பயன்படுத்த இம்ரான் கான் அனுமதிக்காததும் அமெரிக்காவுக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணிக் காப்பது அரசின் கடமை: திமுக



சென்னை:மே,20-

தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணி காத்திட புதிய அரசு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்திட வேண்டும் என திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் வீட்டுக்குள் புகுந்த மர்ம கும்பல் ஒன்று அவரை சரமாரியாகத் தாக்கியுள்ளது. படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள அவர், சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்கும் இதுபோன்ற அச்சுறுத்தல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை திமுக சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

ஊடகங்களை ஜனநாயகத்தின் நான்காவது தூணாக மதிக்க வேண்டும் என்பதுடன், பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயல்பட விடாமல், அச்சுறுத்தி அவர்களின் எழுத்துரிமை மற்றும் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படுவதை திமுக என்றைக்கும் ஏற்றதில்லை. பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் மீது புதிய அரசு சட்டப்படி கடும் நடவடிக்கை எடுத்து அதன் மூலம் தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணி காத்திடுவது அரசின் கடமை என்பது உணர்ந்து, முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் வீட்டுக்குள் புகுந்த மர்ம கும்பல் மீது புதியதாக பொறுப்பேற்றுள்ள மாநில அரசு கடுமையான நடவடிக்கை எடுத்திட வேண்டுமென திமுக சார்பில் கேட்டுக் கொள்கிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கு பாதிப்பை குறைக்க நடவடிக்கை தேவை: மாவட்ட நிர்வாகங்களுக்கு சுகாதாரத் துறை அறிவுறுத்தல்



சென்னை:மே,20-

டெங்கு காய்ச்சல் பாதிப்பை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, மாவட்ட நிர்வாகங்களுக்கு சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக, சுகாதாரத்துறை அனுப்பியுள்ள சுற்றறிக்கை: அதிகமான வெப்பநிலை, சீரற்ற மழை பொழிவு போன்றவை டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் வகை கொசுக்கள் உற்பத்திக்கு காரணமாக உள்ளன.கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு டெங்கு காய்ச்சல் பாதிப்பு தமிழகத்தில் தீவிரமாக இருந்தது. உள்ளாட்சி அமைப்புகள், சுகாதாரத் துறையின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் காரணமாக கடந்த ஆண்டு பாதிப்பும், உயிரிழப்பும் குறைந்தது.நடப்பாண்டில் மேலும் குறைப்பதற்கு சில நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதன்படி, சுகாதாரத் துறை இணையதளத்தில் டெங்கு பாதிப்புகள் குறித்த விவரங்களை உடனுக்குடன் அவசியம் பதிவேற்ற வேண்டும்.

அப்போதுதான், நிகழ் நேர தகவல்கள் கிடைக்கப் பெற்று டெங்கு பரவலை தடுக்க முடியும். நோய் பரப்பும் பூச்சிகள், கொசுக்களை கண்காணித்து அவற்றின் உற்பத்தியை குறைக்க நடவடிக்கை எடுப்பது முக்கியம் ஆகும். அரசு மருத்துவமனைகளில் டெங்கு பரிசோதனைகளை கட்டணமில்லாமல் மேற்கொள்வதற்கான கட்டமைப்பு தயார் நிலையில் இருக்க வேண்டும். குறிப்பாக, பரிசோதனை உபகரணங்கள் போதிய எண்ணிக்கையில் இருப்பு வைத்திருக்க வேண்டும். கொசு உற்பத்திக்கு இடமளிக்காத வகையில் வீடுகள், தொழில்நிறுவன வளாகங்களை பராமரிக்க வேண்டும். நோய் சார்ந்த சூழல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதுக்கோட்டை கொடூரம்: பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு உரிய இழப்பீடு வழங்க மு.வீரபாண்டியன் வலியுறுத்தல்



சென்னை: மே,20-

‘புதுக்கோட்டையில் பெண் ஒருவர் சமூக விரோதிகளால் வழி மறித்து, கடத்திச்சென்று, கூட்டு பாலியல் வன்கொடுமை தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். இந்த சகித்துக் கொள்ள முடியாத குற்றச் செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது’ என அக்கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கடந்த மே 10ஆம் தேதி ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், முதல்வர் விஜய் ஜோசப் விஜய், பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்ய “சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப் படை” அமைக்க உத்தரவிட்டார். அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புதுக்கோட்டை மாவட்டம், மழையூர் காவல் சரகத்தில் உள்ள கிராமத்தில், தந்தையில்லாத நிலையில் தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வரும் வாய்பேச முடியாத, செவித்திறனில்லாத 35 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர், ஞாயிறு அன்று கூலி வேலைக்கு சென்று மாலையில் வீடு திரும்பும் போது சில சமூக விரோதிகளால் வழி மறித்து, கடத்திச் சென்று, கூட்டு பாலியல் வன்தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். இந்த சகித்துக் கொள்ள முடியாத குற்றச் செயலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.பாதிக்கப்பட்ட பெண் பரிதாபகரமான நிலையில் சாலையில் அழுது கொண்டிருந்த போது, அவ்வழியாக வந்த பெண் காவலரின் உதவியோடு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.இந்தக் கொடூரக் குற்றச் செயலில் ஈடுபட்ட கொடுங்குற்றவாளிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும், இந்த குற்றச் செயலில் தொடர்புடைய அனைவரும் கைது செய்யப்பட்டு, சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிக்க விடாமல் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.இந்தக் குற்றச் செயலில் தொடர்புடைய அனைவரும் உடனடியாக கைது செய்யப்பட வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட பெண்ணின் எதிர்காலப் பாதுகாப்புக்காக தமிழ்நாடு அரசு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும், அவருக்கு உயரிய மருத்துவ சிகிச்சை அளித்து உதவ வேண்டுமென்றும் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது” என்று அவர் தெரிவித்துள்ளார்

# அரக்கோணம் செங்கல்பட்டு இரட்டைப் பாதை திட்டத்துக்கு ரயில்வே ஒப்புதல்

சென்னை:மே,20-

ரூ.993 கோடி மதிப்பிலான அரக்கோணம்செங்கல்பட்டு இடையிலான இரட்டைப் பாதை திட்டத்திற்கு இந்திய ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது. 68 கிலோமீட்டர் நீளமுடைய அரக்கோணம்செங்கல்பட்டு வழித்தடமானது, சென்னை கடற்கரை, தாம்பரம், செங்கல்பட்டு மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களை இணைக்கும் சென்னை புறநகர் ரயில்வேயின் முக்கிய வலையமைப்பாகும்.



சென்னை புறநகர் ரயில்வே வலையமைப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதில், அரக்கோணம் செங்கல்பட்டு இரட்டைப் பாதை திட்டம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். தாமதமில்லாத ரயில்கள் இயக்கம் மற்றும் ரயில்களின் செயல்பாட்டுத் திறனை இந்த இரட்டைப் பாதை திட்டம் மேம்படுத்தும் என்று அவர் கூறினார்.

இந்த ரயில்வே வழித்தடம் தெற்கு ரயில்வேயால் இயக்கப்படுகிறது. தினசரி புறநகர் பயணிகள் ரயில் மட்டுமின்றி, நீண்ட தூர மற்றும் சரக்கு ரயில்களாலும் அதிகம் பயன்படுத்தப்படும் முக்கிய வழித்தடங்களில் இதுவும் ஒன்றாகும். இத்திட்டம் சரக்கு போக்குவரத்திற்கும் பெரிதும் பயனளிக்கும். இந்த வழித்தடம் சிமெண்ட், உணவு தானியங்கள், இரும்பு மற்றும் வாகனங்கள் போன்ற பொருட்களை, தொழில்துறை மற்றும் துறைமுகப் பகுதிகளுக்கு மிக விரைவாகக் கொண்டு செல்ல பயன்படும்.

இந்த ரயில் பாதை, மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் மற்றும் இருங்காட்டுக்கோட்டை உள்ளிட்ட பல முக்கியத் தொழில்துறை மண்டலங்கள் வழியாகச் செல்கிறது. எனவே, தொழில்துறை செயல்பாடுகளுக்கு இந்த இரட்டைப் பாதை திட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இளநீர் வியாபாரியிடம் ரூ.10 லட்சம் வழிப்பறி செய்த காவலர்கள் அதிரடி கைது

கிருஷ்ணகிரி:மே,20-

கிருஷ்ணகிரியில் இளநீர் வியாபாரிடம் ரூ.10 லட்சம் பணத்தை கள்ள நோட்டு மாற்ற வைத்திருந்ததாக கூறி பறித்து சென்ற எஸ்.ஐ மற்றும் காவலர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டனர். ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டத்தில் உள்ள கங்காதர நல்லூர் மண்டலத்தை சேர்ந்த செல்வம், லக்ஷ்மன் குமார் மற்றும் வேலூர் மாவட்டம் சைதாப்பேட்டை சேர்ந்த இளங்கோவன் இருவரும் நண்பர்கள் ஆவர்.



இவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி தாலுகா பயிரளி கிராமத்தை சேர்ந்த இளநீர் வியாபாரி மஞ்சுநாத்திடம் கங்காதர நல்லூருக்கு வந்தால் குறைந்த விலைக்கு இளநீர் வாங்கி தருவதாக கூறி நம்ப வைத்துள்ளனர். இதனால் மஞ்சுநாத் ரூ.10 லட்சம் பணத்தோடு கடந்த சனிக்கிழமை மாலை இளநீர் வாங்க சென்றுள்ளார். இந்த கும்பல் தங்களுக்கு அறிமுகமான சித்தூரை சேர்ந்த போக்குவரத்து காவல் நிலைய எஸ்.ஐ லோகநாதன் மற்றும் ஆயுதபடை காவலர் ரவிச்சந்திரன் ஆகியோருடன் சேர்ந்து பணத்தை பறிக்க திட்டமிட்டுள்ளனர். இவர்களின் ஆலோசனைபடி மஞ்சுநாத் சனிக்கிழமை மாலை பணத்தோடு கங்காதர நல்லூர் மண்டலம் அருகே இந்த கும்பலை சேர்ந்த மூவரும் மஞ்சுநாத்துடன் பேசி கொண்டிருந்த நிலையில் கங்காதர நல்லூரை சேர்ந்த எஸ்.ஐ லோகநாதன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் அங்கு வந்தனர்.

கள்ள நோட்டுகளை கை மாற்றுவதாக தகவல் கிடைத்தது எனக் கூறி மஞ்சுநாத் வைத்திருந்த ரூ.10 லட்சம் பணம் மற்றும் தொலைபேசியை பறித்து கொண்டு அவர்கள் அந்த இடத்தில் இருந்து சென்றுவிட்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த மஞ்சுநாத் கங்காதர நல்லூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். இதையடுத்து காவல் ஆய்வாளர் பிரசாத் உடனடியாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்துவுடன் மஞ்சுநாத்தை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணை நடத்தினர். அப்போது சம்பவ இடத்திலுருந்து வந்த லோகநாதன் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோரை கண்டு மஞ்சுநாத் அடையாளம் காட்டியுள்ளார். இதையடுத்து காவல் ஆய்வாளர் பிரசாத் அவர்களை கைது செய்தார். சில மணிநேரம் கழித்து செல்வம், லக்ஷ்மன் குமார் மற்றும் இளங்கோவன் ஆகியோரை பிடித்து ரூ.9 லட்சம் பணம் மீட்கப்பட்டது. இந்த 5 பேரும் சித்தூரில் உள்ள நீதிபதியிடம் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் சிறையில் அடைக்கப் பட்டனர்

# புதுவை தேர்தலில் சட்டவிரோதமாக வாக்களித்த பிரெஞ்சு குடியுரிமை பெற்ற தாய், மகள் மீது வழக்கு

புதுச்சேரி:மே,20-

புதுச்சேரி தேர்தலில் சட்டவிரோதமாக வாக்களித்த பிரெஞ்சு குடியுரிமை பெற்ற தாய், மகள் மீது நீதிமன்ற உத்தரவுப்படி வழக்கு பதிவாகியுள்ளது.புதுவை, தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்களிக்க வெளிநாடு வாழ் இந்தியர்கள் பலர் சொந்த ஊருக்கு வந்தனர். அவர்கள் மீண்டும் வெளிநாடு செல்லும்போது கண்காணித்து உரிய விசாரணை நடத்த விமான நிலைய குடியுரிமை அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்படி தமிழகத்தில் சென்னை, திருச்சி, கோவை, மதுரை சர்வதேச விமான நிலையங்களில் குடியுரிமை அதிகாரிகள் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



சென்னையில் விரலில் மை இருந்தவர்களிடம் விசாரித்தபோது பலர் வெளிநாட்டு குடியுரிமையுடன், தமிழ்நாடு, புதுவையில் தங்கள் பழைய வாக்காளர் அட்டையை பயன்படுத்தி தேர்தலில் வாக்களித்தது தெரியவந்தது. அவ்வாறு வாக்களித்தோரை பிடித்து குடியுரிமை அதிகாரிகள் எந்த தொகுதியில் வாக்களித்தார்கள் என கண்டறிந்து வாக்களித்த எல்லையில் உள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்து வருகின்றனர்.புதுவையில் வெளிநாட்டு குடியுரிமை பெற்று சட்டவிரோதமாக வாக்களித்த பிரெஞ்சு குடியுரிமை பெற்ற லாஸ்பேட்டை இடையஞ்சாவடியை சேர்ந்த மவுனியம்மாள்(70), அவரின் மகள் ரீனா நந்தினி(45) ஆகியோர் வெளிநாடு செல்ல முயன்றபோது சென்னை விமான நிலையத்தில் சிக்கினர். அவர்கள் மீது நீதிமன்ற உத்தரவின்பேரில் லாஸ்பேட்டை போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர்.

# ஆதார் அட்டையை இலவசமாக புதுப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு: ஒன்றிய அரசு

டெல்லி:மே,20-

பொதுமக்கள் தங்களது முகவரி உள்ளிட்ட விவரங்களை myAadhaar இணையதளம் மூலம் புதுப்பிக்கும் வசதியை மேலும் ஒரு வருடத்திற்கு ஒன்றிய அரசு நீட்டித்தது. 2027 ஜூன் 14 வரை இந்த வித கட்டணமும் இன்றி ஆன்லைன் வாயிலாக விவரங்களை பொதுமக்கள் புதுப்பித்துக் கொள்ளலாம்

# “விளையாட்டுத் துறையில் பரிந்துரைகளுக்கு இடமில்லை. தகுதிக்கே முன்னுரிமை” அமைச்சர் ஆதவ் அர்ஜுனா

சென்னை:,மே,20-

“தமிழகத்தில் உள்ள திறமையான விளையாட்டு வீரர்களை எவ்வித பரிந்துரையுமின்றி, முற்றிலும் தகுதியின் அடிப்படையில் கண்டறிவதற்காக புதிய 'திறன் ஆய்வு பிரிவு' (Talent Research Wing) அமைக்கப்படவுள்ளது” என்று விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.



விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தலைமையில் இன்று நேரு உள்விளையாட்டரங்கில் விளையாட்டுத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வு கூட்டத்துக்குப் பின் அவர் கூறியது: “முதல்வர் விஜய் தமிழகத்தின் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை தீட்டி வருகிறார். அந்த வகையில் விளையாட்டுத் துறையில் எதிர்வரும் காலங்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைகள் குறித்தும், அவற்றை செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் குறித்தும் தொடர்புடைய விளையாட்டுத் துறை அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.குறிப்பாக, 2026 27 ஆண்டில் விளையாட்டுத் துறையால் மேற்கொள்ளப்படவுள்ள உட்கட்டமைப்பு பணிகள், அரசுத் துறை ஒதுக்கீட்டில் விளையாட்டுத் வீரர்களுக்கான 3 சதவீத பணி வாய்ப்புகள் வழங்குவது குறித்தும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர்களை மென்மேலும் ஊக்குவிக்கும் வகையில் உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், விளையாட்டு விடுதிகளில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாடுகள் குறித்தும், விளையாட்டு வீரர்களுக்கான நிதி உதவி திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை தேவைகளான காலணிகள் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் கிடைக்க செய்வதை உறுதிசெய்திடவும், விளையாட்டுத் துறையில் வீரர், வீராங்கனைகள் சாதனை படைக்க பொருளாதாரம் இனி ஒரு தடையாக இருக்கக் கூடாது, என்ற அடிப்படையில் அதற்கு தேவையான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு விளையாட்டுத் துறை, விளையாட்டுத சங்கங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஒருங்கிணைத்து பணியாற்றுவதால் இது சாத்தியமாகும் என்பதால் விளையாட்டு சங்களின் செயல்பாடுகளை இணையதள வாயிலாக ஒருங்கிணைக்கவும் தேவையான நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதல்வரின் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற அடிப்படையில் நேரடியாக சென்று விளையாட்டுத் துறையில் மேற்கொள்ளவேண்டிய கட்டமைப்புகள் வசதிகள் குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளது.

குறிப்பாக பள்ளி பயிலும் காலங்களிலேயே விளையாட்டில் சிறந்து விளங்கிவரும், ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலம் தேவையான பயிற்சிகளை வழங்கி சாதனையாளர்களாக திகழச்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக திறன் ஆய்வு பிரிவு (Talent Research Wing) தொடங்கப்பட்டு மாநிலம் முழுவதும் எவ்வித பரிந்துரையும் இல்லாத வகையில் திறமைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து சிறந்த வீரர்களை அடையாளம் காணும் வகையில் இக்குழு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ரிஷிகேஷ் ரயில் நிலையம் அருகே உஜ்ஜைனி எக்ஸ்பிரஸ் ரயில் தடம்புரண்டு விபத்து

ரிஷிகேஷ்:மே.20-

உத்தரகாண்ட் மாநிலம் ரிஷிகேஷ் அருகே உள்ள காண்ட் கான் பகுதியில், உஜ்ஜையினி எக்ஸ்பிரஸ் ரயிலின் மூன்று பெட்டிகள் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. நேற்று இரவு சுமார் 9.30 மணியளவில் இந்தச் சம்பவம் காண்ட் கிராமப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.



ரயிலின் மூன்று பெட்டிகள் தடம்புரண்டு அந்தரத்தில் தொங்கியதால் அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பராமரிப்புக்காக ரயில் கொண்டு செல்லப்பட்டபோது பயணிகள் யாரும் இல்லாததால் பெரும் உயிர்ச்சேதம் மற்றும் அசம்பாவிதங்கள் தவிர்க்கப்பட்டதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. தடம் புரண்ட சுமார் இரண்டரை மணி நேரத்திற்குப் பிறகு மூத்த ரயில்வே அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வந்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, தண்டவாளங்களுக்கு அருகே பெருங்கூட்டம் கூடியது. பின்னர், அரசு ரயில்வே காவல்துறையினர் அக்கூட்டத்தைக் கலைய செய்தனர். இச்சம்பவம் குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# தமிழகத்தில் தேவையான எரிபொருள் கையிருப்பு: எண்ணெய் நிறுவன ஒருங்கிணைப்பாளர் தகவல்


சென்னை:மே.20-

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்பு போதுமான அளவு உள்ளதாக, தமிழகம், புதுச்சேரி எண்ணெய் தொழில் துறை நிறுவனங்களுக்கான மாநில ஒருங்கிணைப்பாளர் வி.சி.அசோகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: ஒட்டுமொத்த எரிபொருள் விநியோகம் சம்பந்தப்பட்ட கிடங்குகளில் இருந்து சில்லறை விற்பனை நிலையங்களுக்கு எந்தவித இடையூறும் இன்றி நடைபெறுகிறது. எரிபொருள் விநியோகங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.தமிழகம் மற்றும் புதுச்சேரியில் நுகர்வோர்களின் எரிபொருள் தேவைக்கேற்ப அனைத்து சில்லறை விற்பனை நிலையங்களிலும் எரிபொருள் இருப்பு இருக்கிறது. எனவே, பொதுமக்கள் பதற்றமடைய வேண்டாம். எரிபொருளை அதிக இருப்பு வைக்க வேண்டாம். தமிழகம் மற்றும் புதுச்சேரி மக்களுக்கு தடையின்றி எரிபொருளை விநியோகம் செய்வதை உறுதி செய்ய எண்ணெய் சந்தை நிறுவனங்கள் உறுதிபூண்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# 40 அடி ஆழ தொட்டியில் இறங்கிய நால்வருக்கு காத்திருந்த அதிர்ச்சி ICUவில் அனுமதி

காஞ்சிபுரம்:,மே,20-

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் இயங்கிவரும் நிறுவனத்தில் 40 அடி ஆழமுள்ள வேஸ்ட் ஆயில் தொட்டியை சுத்தம் செய்ய உள்ளே இறங்கிய தொழிலாளர்கள் 4 பேர் மயங்கி விழுந்தனர்.



இதனை பார்த்த சக தொழிலாளர்கள் அவர்களை மீட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதித்து உள்ளனர். பிள்ளைப்பாக்கம் சிப்காட்டில் யுனைடெட் இண்டஸ்ட்ரீஸ் பிளாஸ்டிக் பி.லிட் என்ற நிறுவனம் இயங்கிவருகிறது இந்நிறுவனம் ஹூண்டாய் கார்களுக்கு பயன்படுத்தும் என்ஜின் மோல்டிங் போன்ற உதிரி பாகங்கள் தயாரிக்கும் வெண்டார் நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

இன்று அங்கு பணியில் இருந்த மணிகண்டன், விக்னேஷ், மதன்ராஜ், ஸ்ரீதர் ஆகிய நான்கு பேரும் 40 அடி ஆழமுள்ள ஆயில் வேஸ்ட் தொட்டியை சுத்தம் செய்ய உள்ளே இறங்கியுள்ளனர். அப்போது நான்கு பேரும் மயங்கிய நிலையில் இருந்ததை பார்த்து அவர்களை காப்பாற்ற சக பணியாளர்கள் உள்ளே இறங்கியுள்ளனர். உடனே நான்கு பேரையும் மீட்டு ஸ்ரீபெரும்புதூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

மேலும் முதலுதவி அளிக்கப்பட்ட நிலையில் நான்கு பேரும் மூச்சுதிணறல் காரணமாக அவதிப்பட்டதால் மேல் சிகிச்சைக்காக ராமச்சந்திரா மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்த சம்பவம் ஸ்ரீபெரும்புதூரில் பணியாற்றும் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

# “இடம் அல்ல... சேவையே முக்கியம்” ஜோதிட அலுவலக சர்ச்சைக்கு தவெக எம்எல்ஏ கனிமொழி சந்தோஷ் விளக்கம்

சென்னை:மே,20-

தனது ஜோதிட அலுவலகத்தில் அரசு அதிகாரிகளைச் சந்தித்தது சமூக வலைதளங்களில் சர்ச்சையான நிலையில், அது குறித்து தவெக எம்.எல்.ஏ கனிமொழி சந்தோஷ் தன்னிலை விளக்கம் அளித்துள்ளார். தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கோவையின் கவுண்டம்பாளையம் தொகுதியில் போட்டியிட்டு வென்ற கனிமொழி சந்தோஷ், தீவிர அரசியலுக்குள் நுழைவதற்கு முன்பாக ஜோதிடராக வலம் வந்தவர். அவர் பொதுச் சுகாதாரத் துறை அதிகாரிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடினேன் என மூன்று புகைப்படங்களைப் பகிர்ந்திருந்தார்.



அதில், மிகப் பெரிய சோபாவில் எம்எல்ஏ கனிமொழி சந்தோஷ் அமர்ந்திருக்க, அவருக்கு எதிரே அரசு அதிகாரிகள் பிளாஸ்டிக் நாற்காலிகளில் அமர்ந்திருந்தது போல இருந்தது. இதுகுறித்து பல்வேறு தரப்பினரும் கேள்விகள் எழுப்பினர். இந்நிலையில், உடனடியாக ஒரு வீடியோ வெளியிட்டு அவரது நிலைமையை விளக்கியிருக்கிறார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “எனது அன்பு மக்களுக்கும், நண்பர்களுக்கும் ஒரு தகவல். பல ஆண்டுகளாக நான் ஜோதிடராக மக்களை சந்தித்து வந்த எனது பழைய ஜோதிட அலுவலகம் இன்று வரை மக்களின் நம்பிக்கையையும் அன்பையும் சுமந்து நிற்கிறது. அந்த அலுவலகம் எனது வாழ்க்கைப் பயணத்தின் முக்கியமான நினைவுகளை தாங்கி நிற்கும் ஓர் இடம்.

தற்போது, எனது புதிய எம்எல்ஏ அலுவலகத்தின் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. அலுவலகத்தின் பெயின்டிங் மற்றும் பிற பணிகள் முழு வேகத்தில் நடைபெற்று வருகின்றன. மக்கள் பயன்பாட்டுக்கு சிறப்பாகவும், அனைவரும் எளிதாக சந்தித்து தங்களது கோரிக்கைகளை முன்வைக்கக் கூடிய வகையிலும் அதை அமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன.

அந்தப் பணிகள் முழுமையாக நிறைவடையும் வரை, வழக்கம்போல நான் எனது பழைய ஜோதிட அலுவலகத்திலேயே பொதுமக்கள், அதிகாரிகள் மற்றும் என்னைச் சந்திக்க விரும்பும் அனைவரையும் சந்தித்து அவர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை கேட்டறிந்து வருகிறேன். எனக்கு மக்கள் சேவையே முதன்மை. அலுவலகம் எந்த இடத்தில் இருந்தாலும், மக்களின் நலனுக்காக என் கதவுகள் என்றும் திறந்தே இருக்கும்.

புதிய எம்எல்ஏ அலுவலகம் முழுமையாக தயார் ஆனவுடன், மேலும் சிறப்பான சூழலில் அனைத்து பொது மக்களையும் அங்கு சந்தித்து, உங்கள் தேவைகள் மற்றும் குறைகளை நேரில் கேட்டறிந்து உடனடி நடவடிக்கை எடுக்க உறுதியாக உள்ளேன். உங்கள் அன்பும், ஆதரவும், நம்பிக்கையும் எனக்கு என்றும் உறுதுணையாக இருக்கிறது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில், “நான் எனது அலுவலகத்துக்கு அரசு அதிகாரிகளை வரவழைத்து, அவர்களை பிளாஸ்டிக் நாற்காலியில் அமரவைத்து அவமரியாதை செய்ததாக ட்ரோல் செய்கிறார்கள். இது எனது ஜோதிட அலுவலகம். இங்கு யார் வேண்டுமானாலும் வரலாம். இது லெதர் நாற்காலி. என்னை சந்திக்க வருவர்களுக்கு நல்ல தரத்தை தான் தருகிறேன்.

நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னதாக ஜோதிடராக இருந்தேன். நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னதாக சமூக செயல்பாட்டாளாராக இருந்தேன். தவெக தலைவர் விஜய்யால் எனக்கு அரசியலில் வர வாய்ப்பு வந்தது.

நான் எந்த அதிகாரியையும் வீட்டுக்கு வரவழைத்து ஊக்குவிப்பதும் கிடையாது. எனக்கும் அரசியல் நாகரிகம் தெரியும். எனது அலுவலகத்தில் தான், நான் அவரை சந்தித்தேன். யாரும் தவறாக நினைக்க வேண்டும். மக்களுக்காக பணி செய்ய தான் இந்த இடத்துக்கு வந்துள்ளேன். தலைவர் விஜய்க்கு எந்த விதமான பங்கமும் ஏற்பட விடமாட்டேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.



## வெற்றிக்குப் பின்னும் மக்கள் மத்தியில் எம்எல்ஏ! கடையநல்லூர் வீதிகளில் இறங்கி நன்றி தெரிவித்த தி.மு.ராஜேந்திரன்

கடையநல்லூர் மே,20- தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்ற புதிய சட்டமன்ற உறுப்பினர் தி.மு.ராஜேந்திரன், தனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்து வருகிறார். அதன் ஒரு பகுதியாக, தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் பகுதியில் தனது நன்றி அறிவிப்புப் பயணத்தைத் தொடங்கிய எம்எல்ஏ தி.மு.ராஜேந்திரன், தொடர்ந்து ரஹ்மானியாபுரம், பேட்டை, பஜார் பகுதி மற்றும் மேல கடையநல்லூர் ஆகிய பகுதிகளில் வீதி வீதியாகச் சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து கைகூப்பித் தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். முன்னாள் வடக்கு மாவட்டச் செயலாளர் செல்லத்துரை, ஒன்றியச் செயலாளர் சுரேஷ், தெற்கு நகரப் பொறுப்பாளர் இத்தாலின் பீரப்பா ஆகியோரின் சிறப்பான ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், மதிமுக மாவட்டச் செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், கடையநல்லூர் வடக்கு நகரச் செயலாளர் அப்பாஸ், யூனியன் துணைத் தலைவர் ஐவேந்திரன், தினேஷ், நல்லையா, காளிமுத்து உள்ளிட்ட திமுக மற்றும் கூட்டணிக் கட்சியின் முக்கிய நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 தொடர்பாக, மாவட்ட அளவிலான கணக்கெடுப்பு அலுவலர்கள், பொறுப்பு அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கான பயிற்சி வகுப்பினை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுங்காரா இ.ஆ.ப., விளக்கேற்றித் துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், சென்னை சென்சஸ் இயக்குநரக இணை இயக்குநர் சுபா, சென்னை சென்சஸ் இயக்குநரக உதவி இயக்குநர் பிஜி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் தேன்மொழி, வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா மற்றும் சென்னை புள்ளிவிவர புலனாய்வாளர் அனுப் உட்படத் துறை சார்ந்த முக்கிய உயர் அதிகாரிகள், பணியாளர்கள் எனப் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார அலங்காநல்லூர் தேர்வுநிலை பேரூராட்சி வார்டு எண் 4 வடக்கு தெருவில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் தரம் குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார்.கட்டாய குளோரினேஷன் மற்றும் மேல்நிலை தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

## டெல்லியில் ஆட்டோ, டாக்ஸி ஓட்டுநர்கள் மே 21 முதல் 3 நாட்கள் வேலைநிறுத்தம்: கட்டணங்களை உயர்த்த கோரிக்கை



புது டெல்லி:மே,20- எரிபொருள் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் வாடகை கட்டணங்களை உயர்த்தக் கோரி, டெல்லியில் உள்ள ஆட்டோ, டாக்ஸி ஓட்டுநர்கள் சங்கங்கள் மே 21 முதல் மே 23 வரை மூன்று நாள் வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளன.

பெட்ரோல், டீசல் மற்றும் சிஎன்ஜி விலை இந்த வாரத்தில் இரண்டு முறை உயர்த்தப்பட்டுள்ளது. மே 15 ஆம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தப்பட்ட நிலையில், இன்று மீண்டும் லிட்டருக்கு 90 பைசா உயர்த்தப்பட்டது. 4 நாட்கள் இடைவெளியில் நிகழ்ந்த இரண்டாவது விலை உயர்வு இதுவாகும். மேலும், டெல்லியில் பெரும்பாலான டாக்ஸிகள் மற்றும் ஆட்டோக்களில் முக்கிய எரிபொருளாகப் பயன்படுத்தப்படும் சிஎன்ஜியின் விலையும் உயர்ந்துள்ளது. இது கிலோவுக்கு ரூ.2 அதிகரித்து, சிஎன்ஜியின் விலை ரூ.87ஐ எட்டியுள்ளது. பெட்ரோல், டீசல் மற்றும் சிஎன்ஜி விலை உயர்வு காரணமாக டாக்ஸி, ஆட்டோ கட்டணங்களை உயர்த்த, அதன் சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளன. அகில இந்திய மோட்டார் போக்குவரத்து காங்கிரஸ் அமைப்பு, நேற்று டெல்லி ஆளுநர் தரஞ்சித் சிங் சந்து மற்றும் முதல்வர் ரேகா குப்தா ஆகியோருக்குக் கடிதம் எழுதியது. அதில், இப்பிரச்சினையில் தலையிட்டு, உயர்த்தப்பட்ட கட்டண விகிதங்களை அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. இந்த சூழலில், டெல்லியில் உள்ள ஆட்டோ, டாக்ஸி ஓட்டுநர்கள் சங்கங்கள் மே 21 முதல் மே 23 வரை மூன்று நாள் வேலைநிறுத்தத்தை அறிவித்துள்ளன. இதனால் டெல்லிவாசிகள் மேலும் ஒரு நெருக்கடியைச் சந்திக்கவுள்ளனர். இந்த வேலைநிறுத்தம் டெல்லியில் உள்ள தினசரி பயணிகளைப் பாதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, உள்ளூர் பயணங்களுக்கு டாக்ஸிகள் மற்றும் ஆட்டோக்களையே பெரிதும் சார்ந்திருப்பவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுவர்.

## மதுரை கிராமப்புற மண்டலம் பொதிகை வட்டார களஞ்சியம் சார்பில் பரவையில் இலவச கண் பரிசோதனை முகாம்




மதுரை,மே 20- மதுரை மாவட்டம் பரவையில் உள்ள ஸ்ரீ முத்து நாயகி அம்மன் திருமண மஹாலில், பரவை ஆர்.எஸ்.பி. கன்ஸ்ட்ரக்ஷன், தானம் அறக்கட்டளையின் பொதிகை வட்டார களஞ்சியம் மற்றும் மதுரை அரவிந்த் கண் மருத்துவமனை ஆகியவை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இம்முகாமில், சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 150க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு தங்களது கண்களைப் பரிசோதித்துக் கொண்டனர். அரவிந்த் கண் மருத்துவமனையின் கண் மருத்துவர் சௌந்தர்யா தலைமையிலான மருத்துவக் குழுவினர் நோயாளிகளைப் பரிசோதனை செய்து உரிய ஆலோசனைகளை வழங்கினர். முகாமில் கண் புரை பாதிப்பு கண்டறியப்பட்ட 25க்கும் மேற்பட்ட ஏழை எளிய நோயாளிகள், இலவச அறுவை சிகிச்சைக்காக மதுரை அரவிந்த் கண் மருத்துவ மனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டனர். மேலும், 26 நபர்களுக்குக் குறைந்த விலையில் பார்வைத் திறனை மேம்படுத்தும் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. முகாமில் பங்கேற்றவர்களில் 15 நபர்களுக்குக் கண் புரை இருந்தபோதிலும், அவர்களுக்கு அதிக இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் இருதய பாதிப்புகள் இருந்ததால், தற்காலிகமாக அறுவை சிகிச்சை செய்யாமல் உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டப்பட்டது. அரவிந்த் கண் மருத்துவமனை முகாம் ஒருங்கிணைப்பாளர் முருகேசன், தானம் அறக்கட்டளையின் கிராமப்புற மண்டல ஒருங்கிணைப்பாளர் ஐயப்பன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, மண்டல சுகாதார ஒருங்கிணைப்பாளர் முத்தையா, பொதிகை வட்டார களஞ்சிய பொறுப்பாளர் ஷண்முகப்பிரியா, பரவை ஆர்.எஸ்.பி. கன்ஸ்ட்ரக்ஷன் உரிமையாளர் பிரபு, மண்டல கணக்காளர் கந்தசாமி மற்றும் பொதிகை வட்டார களஞ்சிய தலைவிகள், பணியாளர்கள் இணைந்து இந்த முகாமிற்கான ஏற்பாடுகளை மிக நேர்த்தியாகச் செய்திருந்தனர்.



## 867 கிராமங்களின் குடிநீர் தாகம் தீர்க்கும் மெகா திட்டம்! வைகை கூட்டுக்குடிநீர் பணிகளை நேரில் ஆய்வு செய்தார் கலெக்டர்

மதுரை மே 20- மதுரை மாவட்டத்தில் உள்ள 7 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராமங்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் நேரில் பார்வையிட்டு அதிரடிஆய்வு மேற்கொணண்டார்*867 கிராம குடியிருப்புகளுக்குப் பாயும் வைகை நீர்:* தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் இம்மாபெரும் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் மதுரை மாவட்டத்தில் உள்ள கள்ளிக்குடி, திருமங்கலம், வாடிப்பட்டி, செல்லம்பட்டி, அலங்காநல்லூர், உசிலம்பட்டி மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட 867 கிராம குடியிருப்புகளுக்கு வைகை ஆற்றை முதன்மை நீர் ஆதாரமாகக் கொண்டு பாதுகாக்கப்பட்ட தூய்மையான குடிநீர் வழங்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் அதிரடி ஆய்வு:*இந்த மெகா திட்டப் பணிகளின் ஒரு பகுதியாக, அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பி. மேட்டுப்பட்டி கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை (OHT) மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டார்.அப்போது, அந்தத் தொட்டியின் கட்டுமானத் தரம், குடிநீரைச் சேமித்து வைக்கும் கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுமக்களுக்கு எவ்விதத் தொய்வுமின்றிச் சீரான முறையில் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்படுவது குறித்து அதிகாரிகளிடம் விரிவாகக் கேட்டறிந்து, பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார்.

## "நாட்டின் பொருளாதாரத்தை தாக்கக் கூடிய 'புயல்' நெருங்கிக் கொண்டிருக்கிறது" ராகுல் காந்தி



புதுடெல்லி: மே,20- நாட்டின் பொருளாதாரத்தை தாக்கக்கூடிய 'புயல்' நெருங்கிக்கொண்டிருக்கிறது என தெரிவித்துள்ள ராகுல் காந்தி, உரிய நடவடிக்கை எடுத்து நாட்டை பாதுகாப்பதற்குப் பதில் பிரதமர் மோடி வேறு ஏதோ ஒன்றைச் செய்துகொண்டிருப்பதாக விமர்சித்துள்ளார். உத்தரப்பிரதேசத்தின் ரேபரேலியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி, "ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக எரிபொருள் விலை உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாகவே நான் இதைச் சொல்லி வருகிறேன். பிரதமர் மோடி நாட்டின் பொருளாதார கட்டமைப்பையே மாற்றிவிட்டார். ஒரு பொருளாதாரப் புயல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய அதானி அம்பானி சார்ந்த பொருளாதாரக் கட்டமைப்பு இனி நீண்ட காலம் நீடிக்காது. அது நிச்சயம் வீழ்ச்சியடையும். இதில், துரதிருஷ்டவசமான விஷயம் என்னவென்றால், இதனால் சாமானிய மக்கள்தான் பாதிக்கப்படப் போகிறார்கள். இந்த பொருளாதார அதிர்ச்சி அதானி, அம்பானி, மோடியை பாதிக்காது. மாறாக ஏழை எளிய மக்களைத் தான் மிக ஆழமாக பாதிக்கும். இது முன்னெப்போதும் இல்லாத வகையில் இருக்கும். கடினமான காலங்கள் வர இருக்கின்றன. ஆனால், நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக பிரதமர் மோடி மக்களை வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறார். ஆனால், அவரே தற்போது ஒரு உலகச் சுற்றுப் பயணத்தில் இருக்கிறார். மின்சார வாகனங்களைப் பயன்படுத்துமாறு பிரதமர் மோடி கூறுகிறார். மின்சார வாகனங்கள் ஒரு பிரச்சினையே அல்ல. உண்மையான பிரச்சினை பணவீக்கமும் வேலையின்மையும்தான். மிக விரைவில் உரங்களுக்குப் பற்றாக்குறை ஏற்படப் போகிறது.பிரதமர் மோடி எந்த உலகில் வாழந்து கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. தொழிலாளர் வர்க்கம், விவசாயிகள், இளைஞர்கள், ஏழைகள் மற்றும் சிறு தொழில்முனைவோரை பிரதமர் மோடி தற்போது பாதுகாக்க வேண்டும். ஒரு பெரும் புயல் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்று நாங்கள் தொடர்ந்து எச்சரித்து வருகிறோம். ஆனால், அவரோ அனைத்தையும் கேலியாகவே எடுத்துக்கொள்கிறார். நடவடிக்கை எடுத்து நாட்டை பாதுகாப்பதற்குப் பதில ாக, அவர் வேறு ஏதோ ஒன்றைச் செய்து கொண்டிருக்கிறார்" என தெரிவித்துள்ளார்.



■ சேலம் மேற்கு வட்டார போக்குவரத்திற்குட்பட்ட பள்ளிகளின் வாகனங்கள் ஆய்வு ஜவகர் மில் மைதானத்தில் நடைபெற்றது. மேற்கு வட்டாரத்திற்கு உட்பட்ட மொத்தம் 38 பள்ளிகளில் 314 வாகனங்கள் இயங்கி வருகின்றன. இந்த ஆய்விற்கு 218 வண்டிகள் வந்திருந்தன. இதில், 5 வண்டிகள் பழுதாகியிருந்தது. ஆய்வில், 213 வண்டிகள் தகுதி பெற்றன. இன்னும், 96 வண்டிகள் ஆய்விற்கு வரவில்லை. இந்த, ஆய்வு 31.5.2026 வரை பரிசோதனை நடைபெறும். ஆய்விற்கு வராத 96 வண்டிகளும் ஆய்வு செய்த பின்பு, பொது சாலையில் இயங்க, தகுதி பெற்ற பின்பு இயக்க அனுமதி வழங்கப்படும் என்று தெரிவித்தார். இந்த வாகன ஆய்வில் வருவாய் கோட்டாட்சியர் உதயகுமார் , சூரமங்கலம் தீயணைப்புத்துறை அதிகாரி, வட்டார போக்குவரத்து அலுவலர் கோகிலா, மோட்டார் வாகன ஆய்வாளர் ஜெயந்தி மற்றும் அலுவலக பணியாளர்கள் உடன் இருந்தனர்.



## தமிழக கோயில்களில் சிறப்புக் கட்டண தரிசன முறையை ரத்து செய்ய கோரி வழக்கு

சென்னை:,மே,20-

தமிழக கோயில்களில் பின்பற்றப்படும் சிறப்புக் கட்டண தரிசன முறையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்க அறநிலையத் துறைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விஸ்வ இந்து பரிஷத் வட தமிழ்நாடு பிரிவு தலைவர் பி.சொக்கலிங்கம் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில், 'தமிழகத்தில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோயில்களில், கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு என்ற பெயரில், 500 ரூபாய் வரை பணம் வசூலித்து, சிறப்புக் கட்டண தரிசன முறை அமல்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோயில்களில் பணம் வசூலித்து, சிறப்பு தரிசனம் செய்ய எந்த சட்டப் பிரிவுகளும் அனுமதி வழங்கவில்லை. கடந்த 1967ம் ஆண்டுக்கு பின் திராவிட கட்சிகள் ஆட்சிக்கு வந்த பின்னர் தான் இந்த நடைமுறை அமலுக்கு வந்துள்ளது. இந்த கட்டண தரிசன முறை காரணமாக, சாதாரண மக்கள் சாமி தரிசனத்துக்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், கர்ப்பிணி பெண்கள், புதுமண தம்பதிகள், பால்குடம் எடுப்பவர்கள், காவடி எடுப்பவர்கள், மாநில ஆளுநர்கள், முதல்வர்கள், மடாதிபதிகள், ஜீயர்கள், உபயதாரர்கள் உள்ளிட்டோருக்கு இலவச சிறப்பு தரிசனத்துக்கு அனுமதிக்கலாம்.

பணத்தின் அடிப்படையில் பாரபட்சம் காட்டும் இந்த திராவிட தர்மம் அரசியலமைப்பு சட்டத்துக்கு விரோதமானது. கோயில்களில் சிறப்புக் கட்டண தரிசன முறையை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கும்படி அறநிலையத் துறைக்கு உத்தரவிட வேண்டும்' என மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000